**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத்துறை – தஞ்சாவூர் மாவட்டம், மனையேறிப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லம் – 2018–2019ஆம் ஆண்டில் புதிய கட்டடம் கட்டுவதற்கு ரூ.110.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (நிலை) எண்: 12** **நாள்: 30.04.2018**
**விளம்பி – சித்திரை, 17**
**திருவள்ளுவர் ஆண்டு, 2049**

**படிக்கப்பட்டது:**

1. மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் நேர்முக கடித எண் 5069/2014/எல்.2, நாள் 06.09.2014.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 1798/மஇக.1/2014, நாள் 01.10.2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க. எண் 1798/மஇக/2014, நாள் 30.11.2017.

----------

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், மனையேறிப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தினை நேரில் பார்வையிட்டதில், அரசு மறுவாழ்வு இல்லக் கட்டடம், இல்லவாசிகளை தங்கவைக்கக்கூடிய நிலையில் இல்லாமல், மிகவும் பழுதடைந்து, மோசமான நிலையில் உள்ளதால் இல்லவாசிகளின் நலன் கருதி, குறைந்தபட்ச சீரமைப்புப் பணிகளான, ஒழுகும் மேற்கூரை மற்றும் ஈரப்பதத்துடன் அமைந்துள்ள தரை மற்றும் சுவர்களை மறுசீரமைப்பு செய்து தருமாறு பரிந்துரைத்திருந்தார். எனவே மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தஞ்சாவூர், மனையேறிப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்தில் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டடங்களை, மறுசீரமைப்பு மற்றும் பழுது நீக்கி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கான செலவினமாக ரூ.1.30 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கோரியிருந்தார்.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், தஞ்சாவூர் மாவட்டம், மனையேறிப்பட்டி அரசு மறுவாழ்வு இல்ல கட்டட மறுசீரமைப்பு மற்றும் பழுது நீக்கப் பணியினை மேற்கொள்ள தஞ்சாவூர் மாவட்ட பொதுப் பணித்துறையினர் கட்டடங்களை ஆய்வு செய்தபோது அக்கட்டடங்கள் பழுதுநீக்கம் செய்யத் தகுதியற்றதாக இருப்பதால், புதியதாக கட்டடம் கட்டலாம் என உதவி செயற்பொறியாளர் (கட்டடங்கள்), தஞ்சாவூர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது எனவும், தஞ்சாவூர் மாவட்டம், மனையேறிப்பட்டி, அரசு மறுவாழ்வு இல்லவாசிகளுக்கான புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு கீழ்க்காணுமாறு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அரசைக் கோரியுள்ளார்:–

| | | | |
|---|---|---|---|
| (1) | 2017–2018ஆம் ஆண்டு | – | 100 இலட்சம் |
| (2) | 2018–2019ஆம் ஆண்டு (10% கூடுதல் சேர்த்து) | – | 110 இலட்சம் |
| (3) | 2019–2020ஆம் ஆண்டு (10% கூடுதல் சேர்த்து) | – | 121 இலட்சம் |

[த.பி.பா.]

3. மேற்காணும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரகக் கட்டுப்பாட்டில் உள்ள தஞ்சாவூர் மாவட்டம், மனையேறிப்பட்டி அரசு மறுவாழ்வு இல்லத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு 2018–2019ஆம் ஆண்டு மதிப்பீட்டின்படி ரூ.110 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"4235 – சமூக பாதுகாப்பு நலன் குறித்த மூலதனச் செலவு–02 – சமூக நலன்–101 – மாற்றுத் திறனாளிகள் நலன் – மாநிலச் செலவினங்கள் – JU – கட்டடங்கள்–16 – பெரும் பணிகள்".

[த.தொ.கு 4235–00–101–JU–1601]

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப்பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு–செலவு பொது–I)த் துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வரவு–செலவு பொது–I)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) / தலைமை பொறியாளர் (கட்டடம்) சென்னை–5 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–2019ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதி (வரவு–செலவு பொது–I)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு முதன்மை தலைமைப் பொறியாளர் (கட்டடம்) / தலைமை பொறியாளர் (கட்டடம்) சென்னை–5 அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை, நிதித் துறையின் அலுவல் சாரா எண் 18993/நிதி(சந)/2018, நாள் 26.04.2018–ல் பெறப்பட்ட இசைவுடன் மற்றும் கூடுதல் பேரேடு எண் 160 (நூற்று அறுபது) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

சா. விஜயராஜ் குமார்
அரசு செயலாளர்

**பெறுநர்**

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–5.
நிர்வாக அலுவலர், அரசு மறுவாழ்வு இல்லம், மனையேறிப்பட்டி,
தஞ்சாவூர் மாவட்டம். (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழிகாக)
மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர் மாவட்டம்.
மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

[த.பி.பா.]

**<u>நகல்:</u>**
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டம்)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதலமைச்சரின் தனிச் செயலர், சென்னை–9.
முதன்மைச் செயலரின் முதுநிலை தனிச் செயலர்,
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
நிதித் (சந/வ.செ.பொது–I/II/பொதுப்பணி–I) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்